# தோரணம்
# Thoranam

நன்றே செய்! இன்றே செய்!!

SMS(UK)Today | மாத e – செய்தி ஏடு | Monthly e-Newsletter

இலை - 1 | மாசி (Feb) 2016 | தோரணம் - 1


## "தோரணம்" ஓர் அறிமுகம்



சைவ முன்னேற்றச் சங்கம் இன்று பிரித்தானியாவில் இலண்டன் மாநகரில் இருந்து கொண்டு சைவத்தையும் தமிழையும் வளர்க்க ஏறத்தாழ 38 ஆண்டுகள் அரும்பணியாற்றி வருவதை யாவரும் அறிவீர்கள். அதன் வளர்ச்சியின் வெளிப்பாடாக வெளிவந்த காலாண்டு இதழான "கலசம்" தனது 80வது இதழை தைமாதம் பொங்கல் தினத்தன்று (15-01-2016) வெளியீடு செய்தது. மிகவும் மகிழ்ச்சிக்குரியதாகும். எமது சங்கத்தின் கீழ் இயங்கும் அமைப்புகள். பல. அவைகள் நடாத்தும் பல்வேறுபட்ட நிகழ்வுகளை (உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும்) யாவற்றையும் "கலசம்" என்ற இதழினூடாக வெளிப்படுத்துவது மிகவும் கடினமான விடயமாகும். அதைக் கவனத்திலெடுத்து ஓர் இணைய இதழை வெளியிட வேண்டுமென்ற எண்ணத்தை இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த பொதுச்செயலாளர் திரு.சோ.நிரஞ்சன் அவர்கள் "கலசம்" தொடர்பான ஒரு கலந்துரையாடலின்போது கூறியிருந்தார். சில காரணங்களால் இணைய இதழ் வெளியிடுவது தாமதப்பட்டு வந்தது. இந்த வருடம் தற்போதை பொதுச்செயலாளர் திரு. இந்துசேகரன் மீண்டும் அதே எண்ணத்தை வெளியிட எப்படியும் இணைய இதழை வெளிக்கொணர்வோம் என்ற முயற்சியை தலைவராகிய திரு. ஆனந்தியாகர் அவர்களின் அனுமதியுடன் ஆரம்பிக்க எண்ணினோம். எமது சங்கத்தின் தலைவரிடமே இந்த மாதாந்த இணைய இதழிற்கு ஒரு பெயரை தருமாறு கேட்டபோது நாங்கள் ஒருவரும் எதிர்பாராத ஒரு அழகான அற்புதமாக சைவமுன்னேற்றசங்கத்தின் செயற்பாடுகளுக்கேற்ப "தோரணம்" என்ற பெயரை தந்தார். அன்னாருக்கு எமது நன்றிகள்.

மின்னஞ்சல் இதழாக வாசகர்களுக்கு "தோரணம்" என்னும் மாத e - இணைய இதழை இணையத்தில் பதிவுசெய்து அனுப்புவதில் சைவ முன்னேற்றச் சங்கம் பெருமகிழ்வெய்துகிறது. இச் செய்த ஏடு செய்திடதுறையில் வளர்வதற்குஅருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் துணை வேண்டி நிற்கும்.......

சைவமுன்னேற்றச்சங்கம்


ஆசிரியர் - வை.சிவனருட்செல்வர் | தயாரிப்பு உதவி - சோ.நிரஞ்சன்






## திருவெம்பாவையும் ஆருத்ரா தரிசனமும் (சைவ முன்னேற்றச் சங்க ஆலயத்தில்)

திருவெம்பாவை 17-12-2015 தொடங்கி 26-12-2015 அன்று வரை ஆருத்ரா தரிசனத்துடன் நிறைவுபெற்றது. தினமும் அதிகாலையில் எமது ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வர ஆலயத்தில் திருவெம்பாவை நிகழ்வு திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை பாடல்களுடனும் கூட்டு ழிபாட்டுடனும் சிறப்பாக நடைபெற்றது. அன்று திருமதி அருளாம்பிகை நடராசா அவர்களின் தலைமையின் கீழ் திருவாசகம் முற்றோதல் நடைபெற்றது. 26-12-2015 அன்று அதிகாலை 4மணியவில் தொடங்கிய ஆருத்ரா தரிசன நிகழ்வு பல சமயாசாரியர்களின் அபிஷேக ஆராாதனைகளுடனும் ஓதுவாரின் கீர்த்தனைகளுடனும் நடனம், நாதஸவர மேள தாளங்களுடனும் ஸ்ரீ சிவகாமி அம்பாள சமேத சிதம்பரேஸ்வரப் பெருமான் பகதர்கள் புடைசூழ எழுந்தரிளி ஊஞ்சல்மீது ஆடி அருள் புரிநத காட்சி காண மிக அரியதாக இருந்தது.

## பிறந்தநாள் வாழ்த்து - வைத்திய கலாநிதி திரு. பாலசேகரம்

(நால்வர் மளிமண்டபம் சைவ முன்னேற்றச சங்கம்)



சைவ முன்னேற்றச் சங்கத்தின் 39 வருடகால வரலாற்றில் கடந்த 35 வருடமாக அதன் அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக, ஊன்றுகோலாக இருந்துவரும் வைத்திய கலாநிதி திரு. பாலசேகரம் அவர்கள் தமது 75ஆவது பிறந்த தின நிகழ்வு மிகச்சிறப்பாக எமது சங்க நாவலர் மணிமண்டபத்தில் நடைபெற்றது. அவருக்கும் அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் நல்ல தேகசுகத்தையும் நீண்ட ஆயுளையும் அளிக்குமாறு ஸ்ரீ சிவகாமி சமேதா நடராஜப் பெருமானிடம் வேண்டி, “தோரணம்” இணைய இதழ் தனது உளமார்ந்த வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

## *சைவமுன்னேற்றச்சங்க ஆலய மற்றும் சங்க நிகழ்ச்சிகள்*

### *மாசி-பங்குனி மாத நிகழ்வுகள்*

21-02-2016 - ஞாயிறு - நடேசர் அபிஷேகம் - மாலை

07-03-2016 - திங்கள் - மகாசிவராத்திரி

19-03-2016 - சனி - யோகர் சுவாமி குருபூசை







## ஆறுமுக நாவலர் தினம்

ஆறுமுக நாவலர் விழா 14-12-2015 அன்று எமது சங்க நால்வர் மணிமண்டபத்தில் சமூகச்செயலாளர் திருமதி புவனேஸ்வரி சபாரத்தினம் அவர்களின் தலையில் சிறப்பாக நடைபெற்றது. எமது அழைப்பை ஏற்று நாவலர் பணியில் ஈடுபாடுள்ள அறிஞர் திரு. மு.த.மாசிலாமணி அவர்கள் கலந்து கொண்டு நாவலர் சைவசமயத்திற்கும் தமிழுக்கும் ஆற்றிய பணிகளை மிக விரிவாக சபையோருக்கு எடுத்துக் கூறினார் அவரைத் தொடர்ந்து எமது சங்க வெளியீட்டுத்துறைச் செயலாளர் திரு.வை. சிவனருட்செல்வர் நாவலரைப் பற்றிய சில குறிப்புகளை ஆதாரங்களுடன் தந்தார். சங்க செயலாளர் திரு. இந்துசேகரன் அவர்களின் நன்றியறிதலுடன் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

## ஞானம் அறக்கட்டளையினரின் சேவைகள் பற்றிய விடியோ பதிவுகள்



சைவ முன்னேற்ற சங்கத்தினரின் வேண்டுகோளை ஏற்று Lyca Mobile நிறுவனத்தின் ஞானம் அறக்கட்டளையினர் தாயக மக்களுக்கு தாங்கள் நேரடியாக செய்யும் தொண்டுகள் பற்றிய ஒலி, ஒளி படக்காட்சிகளை எமது சங்கத்தினருக்கு திரையிட்டுக் காட்டினார்கள். ஞானம் அறக்கட்டளையின் தலைவி திருமதி ஞானம் அல்லிராஜா அவர்கள் எமது சங்க உறுப்பினரரவார். ஞானம் அறக்கட்டளையினர் எமது தாயக உறவுகளிற்கு செய்யும் சேவைகள் அளப்பரியவை. Lyca Mobile நிறுவனத்தின் அதிபரான திரு அல்லிராஜா சுபாஸ் அவர்களை பெற்றெடுத்த அந்த பெருமைக்குரியவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்ததை எமது சங்கம் பெருமையாக கருதுகிறது. வாழ்த்துக்கள் அம்மா!.






## ராகசங்கமம் ( 07-11-2015 )

சைவமுன்னேற்றச்சங்கத்தினர் இலண்டன் வாழ் இளங்கலைஞர்களின் மெல்லிசை ஈடுபாட்டை ஊக்குவிக்கும் வகையில், 3வது தடவையாக ராகசங்கமம் நிகழ்ச்சியை EastHam Town Hall இல் நடத்தினார்கள். இதில் சேகரிக்கப்பட்ட நிதியானது சங்கத்தின் தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. இந்நிகழ்ச்சிக்காக இசை ஆர்வமிக்க மாணவர்களைத் தெரிவுசெய்து அவர்களின் இசை ஆர்வத்தை மேலும் வளர்க்குமுகமாக, குறுகிய காலத்தில் பயிற்றுவித்து மேடையேற்றி நெறியாள்கை செய்த திரு. மா.சத்தியமூர்த்தி அவர்களுக்கு தென்னிந்திய தமிழ்த்திரைப்பட இயக்குனர் திரு பாரதிராஜா அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தது நிகழ்ச்சியின் சிறப்பம்சமாகும்

## யோகாநிலையம் - அறிவொளிவளையம்

யோகா நிலையத்தினரின் அறிவொளி வளையத்தினர் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் வாழும் வாழ்வாதார மட்டத்திற்கு கீழ் உள்ள மக்களுக்கு செய்து வரும் சேவைகள் அளப்பரியவை. அச்சேவைகளில் சிலவற்றை இங்கே காட்சிப்படுத்தியுள்ளோம். அவர்களின் பணி மேன்மேலும் எமது தாயக மக்களுக்கு சென்றடைய “ தோரணம்” தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.







போரின்போது கால்களையிழந்த வன்னிப்பகுதியைச் சேர்ந்த 100 பயனாளிகளுக்கு மனிதாபமானரீதியில் ஊன்றுகோல்கள் (Crutches) வழங்கப்பட்டன. (2016)









# தைப்பொங்கல் நிகழ்வுகளும் கல்சம் 80 ஆவது இதழ் வெளியீடும்

15-01-2016













உடலை உருவாக்கி நிர்வகிக்கும் அதிகாரி உயிரே. உடலே கோயில் என்றம், உடலை ஒட்டி அமைந்த புலன்களும், பொறிகளும் கடமையாற்றும் சேவகர்கள் என்றும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் நான்குமே கோவிலை நடத்தும் தலைமைச் செயலர்கள் எனவும் சாட்சியாகப் பார்த்திருக்கும் ஆன்மாவே இறைவன் எனவும் உபநிடதங்கள் உருவகிக்கின்றன.

-பகவத்கீதை

**தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய**
**மன்னுயிரெல்லாம் தொழும்**

**-திருக்குறள்**

**One,who has given up the thought of 'I and Myself' will be hailed by all**

# ஸ்ரீ ஏகாதசருததிர பாராயண ஜபமும் ஹோமமும்

**ஸ்ரீ அருள்மகு சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வர சந்நிதி 31-01-2016**







வேதத்திலுள்ள நான்கு பிரிவுகளில் ஒன்றான யசுர் பிரிவில் ஏழு சப்த காண்டங்களில் நடுநாயகமாய் விளங்கும் ருத்ர மந்திரத்தை வேதம் ஓதும் பிராமணர்களும் சிவாசாரியார்களும் பாராயணம் செய்யும் நிகழ்வு நடைபெற்றது. மந்திரங்களின் மையப் பகுதியானது பஞ்சாட்சர நமசிவாய ஆகும். இந்த மந்திரம் கேட்பவர் மனதை ஆறுதலாக்கும் விசேட மந்திரமாகும். சகலவிதமான பிரச்சனைகளையும் தீர்க்கக்கூடிய மந்திரமாகும் மரத்திற்கு ஆணிவேர்போல வேதத்திற்கு இம் மந்திரம் நடுநாயகமாக விளங்குகிறது. பதினொரு பகுதிகளாக இருக்கும் இம் மந்திரததை பதினெரு தடவைகள் பாராயணம் செய்வார்கள்.

## பண்ணிசை வகுப்புகள்

**திருமுறைகளை பண்ணுடன் பாடுவதற்குரிய பயிற்சி வகுப்புகள் எமது சங்கத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. ஓதுவார் மூர்த்தி தண்டபாணி அவர்களால் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படும். இவ்வகுப்புகளில் கலந்து பயிற்சி பெற விரும்பும் பாடசாலை மாணவர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் கீழ்க்காணும் தொ. இலக்கங்களுடன் தொர்புகொண்டு பதிவுசெய்து கொள்ளலாம்.**

**தொலைபேசி இலக்கங்கள்**

ச.குகராசா 07952 5067 மா.ரவீந்திரதாஸ் 07882 5785 மா.இந்துசேகரன் 07872 85785

***மரணத்தில் ஆன்மா தான் பேர்த்தியிருந்த பூத உடலை விட்டுத் தன்னுடன் மென்னுடலை எடுத்துச்சென்று, அம்மென்னுடலில் ஆழப்பதிந்த இலட்சியத்திற்கு ஏற்ற பிறவியை மீண்டும் அடைகிறது. இறைவனை வாழ்நாள்தோறும் உறுதியாய் நினைப்பதால், நமது மென்னுடலில் இறைவனை அடைவதான உயர்ந்த இலட்சியம் ஆழப்பதிகிறது. அதனால், மரணத்தில் பிறவித் துயரம் விட்டு, இறைவனுடன் கலக்கலாகிறது.***

~பகவத்கீதை